19th March 1965]

பஞ்சாயத்து யூனியன் ஜீப்புகளைப் பயன்படுத்தும் முறை

*282 கேள்வி —**திரு. செ. மாதவன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள ஜீப்புகளைப் பயன்படுத்தும் முறை பற்றி மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம். திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள மோட்டார் வாகனங்களை உபயோகிக்கும் விதிகளை மாற்றியமைக்கும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்போது உணவுப் பொருள் கொள்முதல் விநியோக வேலைகளுக்காக வருவாய்த் துறையினர் யூனியன் ஜீப்புகளை எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அதனால் யூனியன் வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே மாதம் முழுக்க எடுத்துக்கொள்ளாமல் பத்து நாட்களுக்கு அவர்கள் எடுத்துக்கொள்ளலாம். பாக்கி 20 நாட்கள் யூனியன் வேலைகளுக்காக கொடுக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மனிதர்களுக்கும், உயிர்ப் பொருள்களுக்கும் உணவு தான் அவசியம். ஆகவே உணவுப் பொருள் கொள்முதல் வேலைக்குத்தான் முதலிடம். அவர்கள் இந்த ஜீப்புகளை எடுத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போட்டுத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, உணவுப்பொருள் அவசியம் தான். அதற்காக யூனியன் வேலைகளும் பாதிக்கப்படக்கூடாது. ஆகவே யூனியன் ஜீப்புகளை மாதத்தில் பத்து நாட்களாவது யூனியனுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கி 20 நாட்கள் அவர்கள் எடுத்துக்கொள்ளும்படியாக உத்தரவு பிறப்பிக்க யோசனை கூறுகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : யோசனைக்கு மிக்க நன்றி.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ப்ளாக்குகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஜீப்புகள் சிறிது பழுதடைந்தாலும் ஹெட் குவார்டர்சுக்கு சர்வீஸ் செய்ய அனுப்புகிறார்கள். பல நாட்கள் ஆகிறது, திரும்பி வருவதற்கு. அதனால் ப்ளாக்கில் எந்த வேலையும் நடப்பதற்கு வசதியும், வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே பக்கத்தில் உள்ள சர்வீஸ் ஸ்டேஷன்களில் சர்வீஸ் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எங்கெங்கு சர்க்கார் சர்வீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றனவோ, வொர்க் ஷாப் இருக்கின்றனவோ அங்குதான் செய்துகொள்ளமுடியும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asteris *at the commencement of a speech indicates revision by the Members.]

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66

(1) DEMAND NO. XXVI—IRRIGATION.

(2) DEMAND NO. XLII—CAPITAL OUTLAY ON IRRIGATION.

(3) DEMAND NO. XXVII—PUBLIC WORKS—WORKS.

(4) DEMAND NO. XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

(5) DEMAND NO. XLIII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.